வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

நாள் 01.08.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நிலுவையில் உள்ள வழக்குகளை குறைப்பது நீதித்துறை எதிர்கொள்ளும் பெரிய சவாலாகும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சுகாதார பணியாளர்களின் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சீர்திருத்தம், செயல்திறன் மற்றும் மாற்றம் என்ற மந்திரத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்துவதில் தமது அரசு வெற்றி பெற்றுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று கோர்க்காடு ஏரியை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

முர்மு (9)

நிலுவையில் உள்ள வழக்குகளை குறைப்பது நீதித்துறை எதிர்கொள்ளும் பெரிய சவாலாகும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார். அவர் இன்று மாலை புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட நீதித்துறையின் 2 நாள் தேசிய மாநாட்டில் நிறைவு உரையாற்றினார். வழக்குகள் தேங்கி உள்ளதை தீர்க்க அனைவரும் ஒருங்கிணைந்து தீர்வு காண வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். நிகழ்ச்சியில் பேசிய மத்திய சட்டத் துறை அமைச்சர் திரு அர்ஜீன் ராம் மெக்வால் உச்சநீதிமன்றம் 75 ஆண்டு பயணத்தை நிறைவு செய்துள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

தன்கர் (20)

கொல்கத்தாவில் பெண் மருத்துவருக்கு நடந்த சம்பவத்திற்கு குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் கண்டனம் தெரிவித்துள்ளார். இது போன்ற குற்றச் சம்பவங்களில் ஈடுபடும் குற்றவாளிகளை தண்டிக்க கடுமையான சட்டம் இயற்றப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். உத்திரகாண்ட் மாநிலம் ரிஷிகேஷில் உள்ள டேராடுனில் எயிம்ஸ் மருத்துவமனையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் இன்று உரையாற்றிய அவர், இது போன்ற கொடூர குற்றங்கள் மூலம் மனித குலத்தை அவமானப் படுத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சுகாதார பணியாளர்களின் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். முன்னதாக, தனது 2 நாள் பயணத்தின் 2 ஆம் நாளான இன்று டேராடூனில் உள்ள ராஷ்டிரிய இந்திய ராணுவ கல்லூரியின் கேடட்களிடம் அவர் உரையாற்றினார். ராணுவ பள்ளியில் பெண்களை சேர்க்கும் முடிவை அவர் பாராட்டினார். ஆர்ஐஎம்சி கேடட்கள் நாட்டுக்கு பெருமையுடனும், அச்சமின்றியும் சேவையாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். முன்னதாக அவர் கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார். அன்னையின் பெயரால் ஒரு மரம் வளர்ப்போம் என்ற பிரச்சாரத்தில் மாணவிகள் பங்கேற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

சீர்திருத்தம், செயல்திறன் மற்றும் மாற்றம் என்ற மந்திரத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்துவதில் தமது அரசு வெற்றி பெற்றுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற உலக தலைவர்கள் அமைப்பின் கருத்தரங்கம் ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், இந்தியா உலகளாவிய வாய்ப்புகளின் பூமியாக திகழ்வதாக தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளில் பாஜக ஆட்சியில் இந்திய பொருளாதாரம் 90 சதவிகிதம் வளர்ச்சி கண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்த நிலையான வளர்ச்சி எதிர்காலத்திலும் தொடரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த 10 ஆண்டுகளில் உலக நாடுகளின் பொருளாதாரம் 35 சதவிகிதம் வளர்ச்சி கண்ட நிலையில், இந்திய பொருளாதாரம் 90 சதவிகிதம் வளர்ச்சி கண்டதாக அவர் குறிப்பிட்டார். இதன் மூலம், இந்தியா தனது பிரத்யேக பாதையில் ஓங்கி இருப்பதாக அவர் தெரிவித்தார். வளர்ச்சி அடைந்த இந்தியா ஒட்டுமொத்த உலக நாடுகளின் வளர்ச்சிக்கும் பாதை வகுக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார். உலக நாடுகளின் அனைத்து துறைகளுக்கும் தலைமை வகிக்கும் நாடாக இந்தியா மாறும் என்றும், அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமது அரசு எடுத்து

மோடி 2 (7)

வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். எதிர்கால சவால்களை எதிர்கொள்ள தற்போதே தயாராகி வருவதாகவும் அவர் கூறினார். 2030 ஆம் ஆண்டிற்குள் 500 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அரசின் சீரான சீர்திருத்தம் மற்றும் சிறப்பான செயல்பாட்டின் மூலம் கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீட்கப் பட்டுள்ளதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

ஜிதேந்திர சிங் (11)

உலக நாடுகளின் பொருளாதாரம் உயிரி பொருளாதாரத்தை உள்ளடக்கியதாக மாறும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பயோ – இ 3 என்ற உயிரி தொழில் நுட்பத்திற்கான பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் வேலை வாய்ப்பு கொள்கை 2024 ஐ அவர் வெளியிட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர். இந்த கொள்கை நாட்டின் உயிரி துறையில் அதிக உற்பத்திக்கு வித்திடும் என தெரிவித்தார். உயிரி தொழில் நுட்பத்திற்கான பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் வேலை வாய்ப்பு கொள்கைக்கு கடந்த மாதம் 24 ஆம் தேதி நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில்

ஒப்புதல் அளிக்கப் பட்டதையும் மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் சுட்டிக் காட்டினார்.

*கிரண் ரிஜிஜூ* (14)

மத்திய அரசு கொண்டு வந்துள்ள வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவிற்கு இஸ்லாமிய அறிஞர்களும், மத குருமார்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ மற்றும் நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் தலைவர் திரு ஜெகதாம்பிகா பால் ஆகியோரை சந்தித்து பேசிய பின்னர் அவர்கள் இதனை தெரிவித்தனர். அமைச்சரையும், நாடாளுமன்ற கூட்டுக் குழு தலைவரையும் அஜ்மீர் தர்காவின் தலைவர் திரு சையத் நஸ்ருதீன் சிஷ்தி தலைமையிலான குழுவினர் சந்தித்து பேசினர். அப்போது, வக்ஃபு வாரியத்தால் நாட்டில் உள்ள இஸ்லாமியர்கள் சந்தித்து வரும் பிரச்சனைகள் குறித்த அறிக்கையையும் அவர்கள் அளித்தனர். நாடாளுமன்ற கூட்டுக் குழு மீது தங்களுக்கு முழு நம்பிக்கை இருப்பதாகவும், இஸ்லாமியர்களின் பிரச்சனைகளை கூட்டுக்குழு கேட்டறிந்து அதனை தீர்க்கும் வகைகளை கண்டறியும் என்று தாங்கள் நம்புவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

*ராஜ்நாத் சிங்* (13)

பாரதிய ஜனதா கட்சியின் நாடு தழுவிய தீவிர உறுப்பினர் சேர்க்கையை பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை தொடங்கி வைக்க இருப்பதாக மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சமூக ஊடகப் பதிவில் கருத்து தெரிவித்துள்ள அவர், 18 கோடி உறுப்பினர்களுடன் உலகின் மிகப் பெரிய அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப் பட்டுள்ள பாரதிய ஜனதா கட்சி, பிரதமர் திரு நரேந்திர மோடி, பாரதிய ஜனதா கட்சி தலைவர் திரு ஜேபி நட்டா ஆகியோர் தலைமையில் தொடர் வளர்ச்சியை கண்டுள்ளதாக தெரிவித்துள்ளார். நாளை தொடங்க உள்ள உறுப்பினர் சேர்க்கை நடவடிக்கை கட்சியை மேலும் வலுப்படுத்தவதாக அமையும் என்றும் அவர் கூறியுள்ளார். 88 00 00 20 24 என்ற எண்ணுக்கு மிஸ்டு கால் கொடுப்பதன் மூலம் கட்சியில் இணையலாம் என்றும் திரு ராஜ்நாத் சிங் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

வந்தே பாரத் மோடி 1(17)

ஒட்டுமொத்த தென்னிந்தியாவுடன் இணைந்து தமிழகத்தின் வளர்ச்சிக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். தமிழகம் உட்பட 3 மாநிலங்களில் வந்தே பாரத் ரயிலை காணொளி காட்சி மூலம் புதுடெல்லியில் இருந்தபடி நேற்று அவர் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பேசிய அவர்,

இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில் உத்திரபிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகாவை இணைக்கும் வந்தே பாரத் ரயில் சேவை முக்கிய பங்கு வகிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

வந்தே பாரத் ரயில்கள் மூலம் நாட்டின் பொருளாதாரமும், சுற்றுலாத் துறையும் வளர்ச்சி கண்டு வருவதாக அவர் தெரிவித்தார். தென் மாநிலங்களை ரயில் போக்குவரத்து மூலம் இணைப்பது முக்கியம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். வந்தே பாரத் ரயிலின் விரிவாக்கம், வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை அடைய நாடு வேகமாக முன்னேறி வருவதை வெளிப்படுத்தவதாக அவர் கூறினார்.

முக்கிய வரலாற்று நகரங்களை இணைக்கும் இந்த 3 ரயில்களும் பயணிகளுக்கு உன்னதமான அனுபவத்தை அளிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய ரயில்வே துறை அமைச்சர்

வந்தே பாரத் மோடி 2(7)

திரு அஸ்வினி வைஷ்ணவ், சுதந்திரத்திற்கு பிந்தைய காலகட்டத்தில், ரயில்வேத் துறையில் தொழில்நுட்பம் மற்றும் முதலீடு செய்யப்படாததால் பல ஆண்டுகளாக பல ஆண்டுகளாக எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என்றார். 2016 ஆம் ஆண்டு வரை நாடு முழுவதும் 21 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் வரை ரயில் பாதைகள் மட்டுமே மின் மயமாக்கப் பட்டு

இருந்ததாக அவர் தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளில் 40 ஆயிரம் கிலோ மீட்டர் தூர ரயில் பாதைகள் மின் மயமாக்கப் பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

*துணை நிலை ஆளுநர்* (13)

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று கோர்க்காடு ஏரியை பார்வையிட்டார். பின்னர் ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும், நீர் வழி பாதைகளை தூர்வாரி, ஏரிக்கான நீர் வரத்தை உறுதிப்படுத்தவும் அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். ஏரியில் நீரை சேமித்து நிலத்தடி நீர் மட்டத்தை பாதுகாப்பதன் மூலம், அந்த பகுதியில் உள்ள கிராமங்களுக்கான நீர் பாசனம் மேம்படும் என்றும் அவர் தெரிவித்தார். இதனை தொடர்ந்து உப்பனாறு வாய்க்காலை பார்வையிட்ட அவர் வாய்க்காலின் நீர் கொள்ளளவு, மழைக்காலத்தில் ஏற்படும் நடைமுறை சிக்கல்கள், வாய்க்கால் மீதான மேம்பால கட்டுமான பணிகள் ஆகியவை குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். துணை நிலை ஆளுநருடன் சட்டமன்ற உறுப்பினர் திரு லட்சுமிகாந்தன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு குலோத்துங்கன் பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

*அஸ்வினி வைஷ்ணவ் (6)*

படுக்கை வசதிகளுடன் கூடிய வந்தே பாரத் விரைவு ரயில் சேவை அடுத்த 3 மாதங்களில் அறிமுகம் செய்யப்படும் என்று மத்திய ரயில்வேத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். பெங்களூருவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கான பணிகள் முடிவடையும் தருவாயில் இருப்பதாக தெரிவித்தார். முன்னதாக, பெங்களூருவில் படுக்கை வசதிகளுடன் கூடிய ரயில் பெட்டிகளை அவர் நேரில் ஆய்வு செய்தார்.

*தேஜிந்தர் சிங் (9)*

இந்திய விமானப் படையின் துணை தளபதியாக ஏர் மார்ஷல் தேஜிந்தர் சிங் இன்று டெல்லியில் பதவி ஏற்றுக் கொண்டார். பின்னர் அவர் தேசிய போர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். ஏர் மார்ஷல் தேஜிந்தர் சிங் தேசிய டிஃபென்ஸ் அகடமியின் முன்னாள் மாணவர் மற்றும் 1987 ஆம் ஆண்டு இந்திய விமானப் படையின் போர் ஸ்ட்ரீமிங்-கில் பணியமர்த்தப்பட்டவர் ஆவார். ஜம்மு காஷ்மீரில் விமான அதிகாரியாக இருந்தவர். கடந்த 2007 ஆம் ஆண்டு அவருக்கு வாயுசேனா பதக்கமும், 2022 ஆம் ஆண்டு அதி விஷிஷ்ட் சேவா பதக்கமும் வழங்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.

ஊட்டச்சத்து வாரம் ()

நாடு முழுவதும் தேசிய ஊட்டச்சத்து வாரம் இன்று தொடங்கியது. இதனை முன்னிட்டு, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நிலுவையில் உள்ள வழக்குகளை குறைப்பது நீதித்துறை எதிர்கொள்ளும் பெரிய சவாலாகும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சுகாதார பணியாளர்களின் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சீர்திருத்தம், செயல்திறன் மற்றும் மாற்றம் என்ற மந்திரத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்துவதில் தமது அரசு வெற்றி பெற்றுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று கோர்க்காடு ஏரியை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.